நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னூர்.

**முன்னிலை: – திருமதி. R. கீதா. பி.ஏ, பி.எல்.**
**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், குன்னூர்.**
*(FAC)* **நீதித்துறை நடுவர், குன்னூர்.**

2026 - ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 - ஆம் நாள் திங்கள்கிழமை
(திருவள்ளுவராண்டு 2053 சோபகிருது வருடம் ஆனி மாதம் 22 – ஆம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.109/2025**
**CNR. No.TNNSO50005202025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுதரப்பில் காவல் உதவி ஆய்வாளர்,<br>கொலக்கொம்பை காவல் நிலையம்,<br>**குற்ற எண்.52/2025.** |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | – | A1 - பரமசிவன், (வயது – 38 (1987)),<br>த/பெ. சுப்ரமணி,<br>க.எண். 14/146, எம்பேரஷ் லைன்,<br>கிளிஞ்சாடா.<br><br>A2 - மகேந்திரன், (வயது – 42 (1983)),<br>த/பெ. மணி,<br>க.எண். 5/518, கீழ்பாரதி நகர்,<br>கிளிஞ்சாடா (அஞ்சல்), குன்னூர். |
| வனையப்பட்ட குற்றம் | – | A1 - U/s. 296(b), 115(2), 351(3) of BNS & 4 of TNPHW Act.<br>A2 – U/s. 296(b), 115(2) of BNS & 4 of TNPHW Act. |
| தண்டிக்கப்பட்ட குற்றம் | – | இல்லை. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 28.06.2025 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 29.06.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | – | A1 & A2 – 29.06.2025 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | A1 & A2 - 02.07.2025 (As per the Order of this court in CMP.1230/2025,dated. 02.07.2025) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 29.07.2025 |
| பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.263–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து | – | 20.08.2025 |

<table>
<tr><td>கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td></td><td></td></tr>
<tr><td>சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள்</td><td>–</td><td><table><tr><td>முதல்விசாரணை</td><td>குறுக்குவிசாரணை</td></tr><tr><td>Pw.1 – 17.06.2026</td><td>--</td></tr><tr><td>Pw.2 – 17.06.2026</td><td>--</td></tr><tr><td>Pw.3 – 01.07.2026</td><td>01.07.2026</td></tr></table></td></tr>
<tr><td>சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள்</td><td>–</td><td>01.07.2026</td></tr>
<tr><td>பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.348-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம்</td><td>–</td><td>-Nil-</td></tr>
<tr><td>பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.351(1)(ஆ) – இன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>-</td><td>03.07.2026</td></tr>
<tr><td>தலைமறைவு எதிரி குறித்த விவரம்</td><td>-</td><td>-Nil-</td></tr>
<tr><td>நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம்</td><td>-</td><td>-Nil-</td></tr>
<tr><td>தீர்மானம்</td><td>–</td><td>1 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 296(b), 115(2), 351(3) of BNS & 4 of TNPHW Act, 2 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 296(b), 115(2) of BNS & 4 of TNPHW Act - இன் கீழான குற்றத்திற்கு எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>முடிவு</td><td>–</td><td>இறுதியாக, 1 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 296(b), 115(2), 351(3) of BNS & 4 of TNPHW Act, 2 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 296(b), 115(2) of BNS & 4 of TNPHW Act - இன் கீழான குற்றம் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகளை மேற்படி குற்றங்களிலிருந்து பி.என்.எஸ்.எஸ்.பிரிவு. 271(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | இவ்வழக்கில் **பி.ஆர்.121/2025 –** இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒழுங்கற்ற வடிவமுடைய கைக்கு அடக்கமான கருங்கல் ஒன்று **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.பொ.1 வழக்குச்சொத்து நீதிமன்ற பொறுப்பில் இருப்பதை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்கவும். மேலும் மேல்முறையீடு ஏதேனுமிருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.<br><br>எதிரிகள் ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 29.07.2025 - ஆம் தேதியன்று எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள். 296(b), 115(2), 118(2), 351(3) of BNS & 4 of TNPHW Act - இன் கீழ் இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 03.07.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–I திரு. R. தங்கராஜ், பி.ஏ,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. இராமச்சந்திரன், பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை விசாரணை செய்தும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**1. கொலக்கொம்பை காவல்நிலைய காவல் ஆய்வாளர் பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.193 – இன் கீழ் எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையின் விவரம் :–**

(i) கடந்த 28.06.2025 – ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு கொலக்கொம்பை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட கிளிஞ்சாடாவில் உள்ள அரசு நியாய

விலைக்கடையில் 1, 2 எதிரிகள் சாட்சி – 5 டம் புளுங்கள் அரிசி கேட்டு பிரச்சனை செய்து கொண்டிருந்தபோது அங்கு வந்த சாட்சி – 4 அ.சா.1 – டம் என்னம்மா கடையில் ஒரே சத்தமாக இருக்கிறது என்று கேட்டதற்கு 1, 2 எதிரிகள் பச்சை அரிசியை கொடுத்ததை மாற்றி தருமாறு கேட்டு கொண்டிருக்கிறார்கள் என்று கூறியதற்கு 1, 2 எதிரிகள் அ.சா.1 – ஐ பார்த்து ஏன்டி புண்ட மகளே நான் என்ன செய்தால் உனக்கென்ன என்று பொதுஇடத்தில் வைத்து அ.சா.1 – ஐ கெட்ட வார்த்தையால் திட்டிய குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு. 296(b) of BNS – இன் படியும், பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1 – ஆம் எதிரி அ.சா.1 – இன் மார்பின் மீது கையை வைத்து தள்ளி கையால் அ.சா.1 – இன் இடது தோள்பட்டையில் ஓங்கி அடித்து வலி ஏற்படுத்தியும், 2 – ஆம் எதிரி அ.சா.1 – ஐ போடி தேவுடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டி அ.சா.1 – இன் முதுகில் ஓங்கி அடித்து வலி ஏற்படுத்தியுள்ள குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு.115(2) of BNS – இன் படியும்,

(ii) பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, அ.சா.1 வலி தாங்க முடியாமல் ஏன் அண்ணா என்னை அடிக்கிறீர்கள் நான் என்ன தப்பு செஞ்சேன் என்று கேட்டதற்கு 1 – ஆம் எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து அ.சா.1 – ஐ பார்த்து அப்படிதாண்டி அடிப்பேன் ஒழுங்கா ஓடிப்போயிரு இல்லை என்றால் இந்த கல்லால் அடித்து உன்னை கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ள குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 351(3) of BNS – இன் படியும், பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, அ.சா.1 – ஐ பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து 1, 2 எதிரிகள் பொது இடத்தில் வைத்து கெட்ட வார்த்தையில் திட்டியும், மார்பின் மீது கையை வைத்து கீழே தள்ளி கையால் வாதியின் இடது தோள்பட்டையில் ஓங்கி அடித்து வாதிக்கு வலி ஏற்படுத்திய குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு. 4of TNPHW Act – இன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கொலக்கொம்பை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 1, 2 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.230 பிரிவின் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி போதிய கால அவகாசம் கொடுத்து 1 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 296(b), 115(2), 351(3) of BNS & 4 of TNPHW Act, 2 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 296(b), 115(2) of BNS & 4 of TNPHW Act - இன் படியும் குற்றச்சாட்டு வனைந்து, குற்றச்சாட்டு குறித்து விளக்கிக்கூறி வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.3** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.7** ஆவணங்களும், **அ.சா.பொ.1** சான்றுப்பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை.

4. **<u>அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

(i) **அ.சா.3** திரு. சதாசிவம், சிறப்பு உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் இளையராஜா பணிமாறுதலில் சென்றுவிட்டதால் இவ்வழக்கு கோப்பை பார்வையிட்டு அவரது கையொப்பத்தை தெரிந்து கொண்டு அவருக்காகவும் ஆவணங்களை பார்த்து சாட்சியமளிப்பதாகவும், கடந்த 29.06.2025 – ஆம் தேதி காலை 09.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த தலைமை காவலர் மகேஷ்குமார் என்பவரிடம் அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.சா.ஆ.2** புகார் மனுவை பெற்று, அந்த புகார் மனுவில் அ.சா.1 – டம் **அ.சா.ஆ.1** கையொப்பம் பெற்று, அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.52/2025, பிரிவுகள்.296(b), 115(2), 351(3) of BNS r/ 4 of TNPHW Act – இன் கீழ் **அ.சா.ஆ.3** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையுடன் புகார் வாக்குமூலத்தை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை

புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் இளையராஜா அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும்,

(ii) பின்னிட்டு அன்றையதினமே வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் இளையராஜா அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 10.00 மணிக்கு சம்பவஇடம் சென்று சாட்சிகள் சுரேஷ், அரவிந்த் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.4** பார்வை மகசர் மற்றும் **அ.சா.ஆ.**5 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அன்றையதினமே காலை 10.30 மணிக்கு சம்பவஇடத்தில் கிடந்த **அ.சா.பொ.1** கைக்கு அடக்கமான கருங்கல் ஒன்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் **அ.சா.ஆ.6** கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், பின்னிட்டு சாட்சிகள் மனிஷா, ஆனந்தகுமார், முரளி, பெரியசாமி, இளையராஜா, சுரேஷ், அரவிந்தன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், உதவி ஆய்வாளருடைய விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவரவே அன்றையதினமே 12.00 மணிக்கு சேலாஸ் பஜாரில் வைத்து எதிரிகள் பரமசிவம் மற்றும் மகேந்திரனை கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும்,

(iii) பின்னிட்டு கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருளை **அ.சா.ஆ.7** படிவம் – 91 தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், 02.07.2025 – ஆம் தேதியன்று வழக்கு பதிவு செய்த தலைமை காவலர் மகேஷ்குமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னிட்டு உதவி ஆய்வாளர் தனது விசாரணையில் எதிரி மீதான குற்றம் உண்மை என தெரியவரவே புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள்.296(b), 115(2), 351(3) of BNS r/ 4 of TNPHW Act – இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**5.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த சங்கதிகளை தொகுத்து பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.

351(1)(b) பிரிவின் கீழ் வினவிய போது எதிரிகள் மேற்படி சாட்சியங்களை மறுத்து சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் ஏதும் விசாரிக்கப்படவில்லை.

6. **தீர்வுக்குறிய பிரச்சனை :–**

இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில், 1 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 296(b), 115(2), 351(3) of BNS & 4 of TNPHW Act, 2 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 296(b), 115(2) of BNS & 4 of TNPHW Act - இன் படியான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

7. **பிரச்சனை :–**

கடந்த 28.06.2025 – ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு கொலக்கொம்பை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட கிளிஞ்சாடாவில் உள்ள அரசு நியாய விலைக்கடையில் ஏற்பட்ட பிரச்சனையின் போது 1, 2 எதிரிகள் அ.சா.1 – ஐ பார்த்து ஏன்டி புண்ட மகளே நான் என்ன செய்தால் உனக்கென்ன என்று பொதுஇடத்தில் வைத்து அ.சா.1 – ஐ கெட்ட வார்த்தையால் திட்டியும், 1 – ஆம் எதிரி அ.சா.1 – இன் மார்பின் மீது கையை வைத்து தள்ளி கையால் அ.சா.1 – இன் இடது தோள்பட்டையில் ஓங்கி அடித்து வலி ஏற்படுத்தியும், 2 – ஆம் எதிரி அ.சா.1 – ஐ போடி தேவுடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டி அ.சா.1 – இன் முதுகில் ஓங்கி அடித்து வலி ஏற்படுத்தியும், அ.சா.1 வலி தாங்க முடியாமல் ஏன் அண்ணா என்னை அடிக்கிறீர்கள் நான் என்ன தப்பு செஞ்சேன் என்று கேட்டதற்கு 1 – ஆம் எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து அ.சா.1 – ஐ பார்த்து அப்படிதாண்டி அடிப்பேன் ஒழுங்கா ஓடிப்போயிரு இல்லை என்றால் இந்த கல்லால் அடித்து உன்னை கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும், அ.சா.1 – ஐ பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து 1, 2 எதிரிகள் பொது இடத்தில் வைத்து கெட்ட வார்த்தையில் திட்டியும், மார்பின் மீது கையை வைத்து கீழே தள்ளி கையால் வாதியின் இடது தோள்பட்டையில் ஓங்கி அடித்து வாதிக்கு வலி ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரிகள் சட்டப்பிரிவு. **296(b), 115(2), 351(3) of BNS & 4 of TNPHW Act** – இன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கொலக்கொம்பை

காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. <u>**தீர்வு :–**</u>

அரசு தரப்பு வழக்கு யாதெனில் எதிரிகள் மற்றும் புகார்தாரர் கூட்டாக சமரச மனு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட திருமதி. மனிஷா, தனது முதல் விசாரணையில்,

> *" ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊர் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள். நான் எதிரிகளுடன் சமாதானமாக செல்கிறேன். எதிரிகளை விடுதலை செய்வதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. என்னை எதிரிகளுடன் சமாதானமாக செல்வதற்கு என்னை யாரும் கட்டாயப்படுத்த வில்லை. சம்பவசமயத்தில் நியாய விலை கடைக்கு நான் சென்ற போது அங்கு கூட்டமாக இருந்த ஆட்கள் பொருட்கள் வாங்குவதற்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டு அதிலிருந்த 2, 3 நபர்கள் என்னை அசிங்கமாக பேசி எனது முதுகில் கையால் அடித்து மிரட்டி சென்றார்கள். கூட்டமாக இருந்ததால் எனக்கு அந்த நபர்கள் யார் என்று அடையாளம் தெரியவில்லை. இது சம்பந்தமாக நான் கொலக்கொம்பை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் தான் அது. (***புகார் மனுவிலுள்ள அ.சா.1 – இன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது***). வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.*

**என்று அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளார்.**

இவ்வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட திரு. ஆனந்தகுமார், தனது முதல் விசாரணையில்,

> *" அ.சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். நாங்கள் எதிரிகளுடன் சமாதானமாக செல்கிறோம். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை."*

**என்று அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளார்.**

**9.** அரசு தரப்பு வழக்கறிஞர், இவ்வழக்கின் முக்கிய சாட்சியான புகார்தாரர் தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளார் என்பதாலும், முக்கிய சாட்சிகள் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டதாலும், மற்ற சாட்சிகளை விசாரிப்பதால் நீதிமன்றத்தின் நேரம் தான் வீணாகும் என்பதனாலும் மற்ற சாட்சியங்களை விசாரிக்காமல் விலக்கு அளித்து அரசு தரப்பு சாட்சியங்களை முடித்துள்ளார்.

**10.** இந்த வழக்கில் அரசு தரப்பிற்கு ஆதரவாக காவல் நிலையத்திலுள்ள காவல் உதவி ஆய்வாளர் மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். அவரின் சாட்சியானது தனது அரசு பணியை செய்யும்போது சொன்ன சாட்சியாகவே கருத முடியும். ஏனெனில், அரசு தரப்பு சாட்சியான புகார்தாரர் தாமே அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சி அளிக்காத போது காவல்துறையினரின் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிகள் குற்றவாளிகள் என தீர்மானிக்க முடியாது. மேலும், நமது மாண்பமை உச்சநீதிமன்றம் **மோகன் அபோட் எதிர் பஞ்சாப் அரசு 2008 MLJ Crl 212 SC மற்றும் மருத்துவர் அரவிந்த் பர்சால் எதிர் மத்திய பிரதேச அரசு 2008(3) MLJ Crl 1517 SC என்ற தீர்ப்புகளில்** குறிப்பிட்டுள்ள முக்கியமான சாராம்சம் என்னவென்றால்,

> *''தனிநபர் சார்ந்த எந்த ஒரு பிரச்சனையிலும் அரசு தரப்புக்கு சாதகமான முடிவினை எட்ட முடியாத நிலையில் வழக்கு இருக்குமேயானல் அந்த வழக்கை நிலுவையில் வைத்திருப்பது ஓர் ஆடம்பரமே என்பதால் நீதிமன்றமே குற்றவியல் நடவடிக்கைகளில் பொதுவான சமாதானத்தை ஏற்றுக்கொண்டு நீதிமன்றத்தின் நேரத்தை சேமித்து அதை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண்பதில் செலவிட முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது ''*

என குறிப்பிட்டு கூறியுள்ளது. மேற்படி தீர்ப்பினை இந்த வழக்கில் தீர்ப்பு வழங்குவதற்கு வழிகாட்டியாக இந்த நீதிமன்றம் எடுத்துக்கொள்கிறது. மேலும், முக்கிய சாட்சிகள் சமாதானத்தின் அடிப்படையில் வழக்கை மேல் நடத்த விரும்பாதபட்சத்தில் குற்ற வழக்கை மேல் நடத்துவது சட்டத்திற்கு புறம்பான ஒரு செயல் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கில் புகார்தாரரும், எதிரிகளும் சமாதானமாக சென்று விட்டபடியால் **பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.**359 - இன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அது குற்ற பல்வகை மனு எண்.**970/2026** ஆக கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், வழக்கின் சட்டப்பிரிவுகள் சமாதானமாக செல்லக்கூடிய சட்டப்பிரிவுகள் அல்ல என்ற காரணத்தினால் அந்த மனு இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

**11.** அரசு தரப்பு சாட்சியான முக்கிய சாட்சிகள் அரசு வழக்கை ஒத்து சாட்சி அளிக்காதது அரசு வழக்கிற்கு மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் காவல்துறையினரின் சாட்சியம் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவருக்கு தண்டனை பெற்றுத்தர போதுமான சாட்சியாக அமையவில்லை. ஆகவே. அரசு தரப்பு வழக்கை போதிய சாட்சியத்தின் அடிப்படையில் அரசு நிரூபிக்க தவறிவிட்டமையால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12. <u>முடிவு:–</u>

**இறுதியாக,** 1 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 296(b), 115(2), 351(3) of BNS & 4 of TNPHW Act, 2 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 296(b), 115(2) of BNS & 4 of TNPHW Act - இன் கீழான குற்றங்கள் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகளை மேற்படி குற்றங்களிலிருந்து பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.271(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

13. <u>சான்று பொருட்களின் மீதான உத்தரவு:–</u>

இவ்வழக்கில் **பி.ஆர்.121/2025** – இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒழுங்கற்ற வடிவமுடைய கைக்கு அடக்கமான கருங்கல் ஒன்று **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.பொ.1 வழக்குச்சொத்து நீதிமன்ற பொறுப்பில் இருப்பதை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்கவும். மேலும் மேல்முறையீடு ஏதேனுமிருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

**14.** எதிரிகள் ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிக்கப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 – ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 – ஆம் நாள் திங்கள்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

//ஒம்.//R.கீதா,

விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.

**<u>பின்சேர்க்கை :–</u>**
**<u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

| Persecution Witnesses No. | Name of the Witnesses | Description |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. மனிஷா. | புகார்தாரர். |
| அ.சா.2 | திரு. ஆனந்தகுமார். | செவியுறு சாட்சி. |
| அ.சா.3 | திரு. சதாசிவம், சிறப்பு உதவி ஆய்வாளர், கொலக்கொம்பை காவல் நிலையம். | புலன் விசாரணை அதிகாரி. |

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| *Exhibits No.* | *Date* | *Description of Exhibits* | *Proved by/ Attested by* |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 29.06.2025 | புகார் மனுவிலுள்ள அ.சா.1 – இன் கையொப்பம் மட்டும். | அ.சா.1. |
| அ.சா.ஆ.2 | 29.06.2025 | புகார் மனு. | அ.சா.3. |
| அ.சா.ஆ.3 | 29.06.2025 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.3. |
| அ.சா.ஆ.4 | 29.06.2025 | பார்வை மகசர். | அ.சா.3. |
| அ.சா.ஆ.5 | 29.06.2025 | மாதிரி வரைபடம். | அ.சா.3. |
| அ.சா.ஆ.6 | 29.06.2025 | கைப்பற்றுதல் மகசர். | அ.சா.3. |
| அ.சா.ஆ.7 | 29.06.2025 | படிவம் – 91. | அ.சா.3. |

**<u>அரசுதரப்பு சான்றுபொருள் :–</u>**

| *Mo's.* | *Description of Material Object* | *Proved by/ Attested by* |
|---|---|---|
| அ.சா.பொ.1 | கைக்கு அடக்கமான கருங்கல் ஒன்று. | அ.சா.3. |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்</u>** :–
இல்லை.

**<u>குறிப்பு:–</u>**

1) விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

//ஒம்.//R.கீதா,
விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.

//உண்மை நகல்//

//ஒம்.//R.கீதா,

விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.